FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section ~~154 Cr.P.C.~~ 173 BNSS
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120333

1. District : நாமக்கல் மாவட்டம் | PS: ஊ.த.த. பிரிவு காவல்நிலையம் நாமக்கல் | Year: 2025 ஆண்டு | FIR No.: 02/AC/2025 மு.த.அ. எண் | Date: 04.02.2025 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act, 2018. Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை On 21.01.25 at about 09.00 Hrs by A1, A2 at field
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை on 21.01.25 at 10.30 Hrs by A1 at his office.
on.01.02.25 at 20.00 Hrs by A2 over Phone.
on.03.02.25 at 12.30 Hrs by A1 at his office.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.02.2025 at 07.00 Hrs | Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.02.2025 Vol-I | Time : நேரம் 07.00 Hrs.

4. Type of Information : Written/ ~~Oral~~ :
தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் எர்ணாபுரம் நாமக்கல் மாவட்டம் சுமார் 7 Km மேற்கு, நில அளவை அலுவலகம், நாமக்கல் சுமார் 3Km கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. திருமுருகன். குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : திரு. பழனிசாமி தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1985
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் தனியார் நிறுவன ஊழியர்
(g) Address : முகவரி கதவு எண்: 1/83, மேலத்தெரு, வள்ளிபுரம் அஞ்சல், நாமக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு. அசோக் குமார், சர்வேயர், வட்ட நில அளவை அலுவலகம், நாமக்கல்.
2) திரு. வேலுச்சாமி, கிராம நிர்வாக அலுவலர், அணியார் கிராமம். நாமக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. Thirunag

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

04/2/25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
04.02.2025-ம் தேதி 09.15 மணி

Name: பெயர் ம.சுபாஷினி,
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
உ.ந.த.க.பிரிவு, நாமக்கல்.

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற **எண் 2/AC/2025** u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

இன்று 04.02.2025 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு காவல் துணைக் கண்காணிப்பார் திருமதி. எம்.சுபாஷிணி ஆகிய நான் நிலையத்திலிருந்தபோது, திரு.P.திருமுருகன், த/பெ. பழனிச்சாமி, கதவு எண். 1/83, குடித்தெரு, வள்ளிபுரம் அஞ்சல், வள்ளிபுரம், நாமக்கல் என்பவர் அலுவலகம் வந்து கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புதல், P.திருமுருகன், த/பெ. பழனிச்சாமி, கதவு எண். 1/83, குடித்தெரு, வள்ளிபுரம் அஞ்சல், வள்ளிபுரம், நாமக்கல். பெறுதல், காவல் துணை கண்காணிப்பாளர், லஞ்ச ஒழிப்பு துறை, நல்லிபாளையம், நாமக்கல். அம்மா, நான் தற்பொழுது நாமக்கல், வள்ளிபுரம் அஞ்சல், குடித்தெருவில் கதவு எண். 1/83 என்ற முகவரியில் எனது மனைவி ஆர்.தேன்மொழி, மற்றும் எனது 2 குழந்தைகளுடன் குடியிருந்து வருகிறேன். நான் எம்.சி.ஏ படித்துள்ளேன். நான் தனியார் நிதி நிறுவனத்தில் வேலைசெய்து வருகிறேன். எனது மாமனார் திரு.இராமசாமி அவர்கள் ஏற்கனவே காலமாகிவிட்டார். எனது மாமியார் ஆர்.வசந்தா அவர்கள் பெயரில் நாமக்கல் வட்டம், எர்ணாபுரம் கிராம சர்வே எண். 42/2A1 ல் உள்ள 3.52 ஏக்கர் நிலத்தில் 2 ஏக்கர் 04 சென்ட் நிலம் பாத்தியப்பட்டதாகும். அவருக்கு பாத்தியப்பட்ட அந்த 2 ஏக்கர் 04 சென்ட் நிலத்தில் 1 ஏக்கர் 02 சென்ட் நிலத்தை எனது மனைவி ஆர். தேன்மொழி பெயரில் தான செட்டில்மெண்ட செய்து கொடுக்க முடிவுசெய்திருந்தார். அதன்படி கடந்த 24.12.2024 ஆம் தேதியன்று வேலகவுண்டம்பட்டி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1/4056/2024 படி எனது மனைவி பெயரில் அவரது அம்மா திருமதி. வசந்தா அவர்களுக்கு பாத்தியப்பட்ட புதிய உட்பிரிவின்படி பட்டா எண்.798, சர்வே எண்.42/2A1,பு.ஹெக்.1.38.00 தீ.ரு.5,31 க்கு உட்பட்ட 1 ஏக்கர் 02 சென்ட் நிலத்தை தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளார். தான செட்டில்மெண்ட் செய்தபோதே பட்டா மாறுதலுக்கான விவரங்கள் நாமக்கல் வட்டாட்சியர் அலுவலக எர்ணாபுரம் கிராமம் தொடர்பான குறுவட்ட அளவர் / கிராம நிர்வாக அலுவலருக்கு இணையம் வழியாக 24.12.2024 ஆம் தேதியன்றே விண்ணப்ப எண். 2024/0105/09/324983 படி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் உட்பிரிவு கட்டணமாக ரூ.400/– ம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் பிறகு கடந்த 20.01.2025 ஆம்

தேதியன்று இரவு சுமார் 8 மணியளவில் 9443825789 என்ற செல்போன் எண்ணிலிருந்து 7639991960 என்ற எனது அத்தையின் செல்போன் எண்ணிற்கு தொடர்புகொண்டு வி.ஏ.ஓ வேலுச்சாமி பேசுவதாக கூறி அடுத்தநாள் 21.01.2025 அன்று காலை நிலத்தை தணிக்கை செய்ய சர்வேயருடன் வருவதாகவும், அதனால் நிலம் தொடர்பான ஆவணங்களுடன் காலை சுமார் 9 மணியளவில் நிலத்திற்கு வந்துவிடுமாறு கூறியுள்ளார். அந்த தகவலை எனது மனைவி என்னிடம் கூறினார். அதன்பேரில் நான் 21.01.2025 அன்று காலை 9 மணியளவில் நிலம் அமைந்துள்ள இடத்திற்கு நிலம் தொடர்பான ஆவணங்களுடன் சென்றேன். சிறிது நேரத்தில் ஏற்கனவே எர்ணாபுரம் கிராம நிர்வாக அலுலராக பணியாற்றி தற்பொழுது அணியார் கிராம நிர்வாக அலுவலகராக பணியாற்றி வரும் திரு. வேலுச்சாமி மற்றும் அவருடன் இருவர் அங்கு வந்தனர். அதில் ஒருவர் தன்னை சர்வேயர் அசோக்குமார் என்றும், மற்றொருவர் உதவியாளர் திரு. மணி என்றும் தெரிவித்தனர். பிறகு எனது மனைவி பெயரில் உள்ள 1 ஏக்கர் 02 சென்ட் நிலத்திற்குரிய ஆவணங்களை சரிபார்த்து பின்னர் நிலத்தை அளந்தனர். பிறகு சப்டிவிசன் செய்து தனிப் பட்டா வழங்க தனியாக ரூ.5,000/– ம் சர்வேயருக்கு கொடுக்கவேண்டும் என்று வி.ஏ.ஓ திரு.வேலுச்சாமி கூறினார். அருகில் இருந்த சர்வேயர் திரு. அசோக்குமார் அவர்களும் அதையே கூறினார். அதற்கு நான் பார்க்கலாம் சார் என்று கூறினேன். அதன் பிறகு அவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டனர். பிறகு 29.01.2025 ஆம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் நாமக்கல் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள சர்வேயர் திரு.அசோக்குமார் அவர்கள் அலுவலகத்திற்குச் சென்று அங்கிருந்த அவரிடம் எனது மனைவி பெயரில் உள்ள நிலத்திற்குரிய உட்பிரிவுடன் கூடிய தனிப்பட்டா பற்றி கேட்டேன். அதற்கு அவர் தான் ஏற்கனவே கூறியவாறு ரூ.5,000/– கொண்டுவந்துள்ளீர்களா என்று கேட்டார். நான் அப்போது பணம் இன்னும் ரெடியாகவில்லை என்று கூறினேன். அதற்கு அவர் ரூ.5,000/– த்தை ரெடிசெய்த பின்னர் தன்னிடமே கொண்டுவந்து கொடுக்குமாறு கூறினார். பிறகு நான் அங்கிருந்து கிளம்பி வந்துவிட்டேன். எனது மனைவி தேன்மொழி பெயரிலான பட்டா மாறுதல் விண்ணப்பம் தொடர்பாக எனது செல்போன் எண்ணிற்கு அவ்வப்போது குறுஞ்செய்திகள் வரும். அதன்படி 31.01.2025 அன்று பட்டா மாறுதல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டதாக குறுஞ்செய்தி வந்தது. அதன் பிறகு 01.02.25 அன்று இரவு 8.00

மணியளவில் வி.ஏ.ஓ. திரு.வேலுச்சாமி எனது அத்தை செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்ட போது எனது மனைவி செல்போனை எடுத்து பேசியுள்ளார். அப்போது அவர் தான் ஏற்கனவே நிலம் அளக்கும்போது கூறிருந்த ரூ.5,000/– பணத்தை தன்னிடமே கொடுத்து விடுமாறும், தான் சர்வேயருக்கு கொடுத்துவிடுவதாக கூறியுள்ளார். மேலும் பணம் ரெடியானவுடன் போன் செய்யுமாறும் தான் வீட்டிலேயே வந்து வாங்கிக் கொள்வதாகவும் கூறியுள்ளார். அந்த விவரத்தை எனது மனைவி என்னிடம் கூறினார். அதன் பிறகு நான் 03.02.2025 அன்று பகல் சுமார் 12.30 மணியளவில் சர்வேயர் அலுவலகத்திற்குச் சென்று வி.ஏ.ஓ. திரு.வேலுச்சாமி போன் செய்து பணத்தை அவரிடமே கொடுக்கச் சொன்ன விவரத்தை சரவேயர் திரு.அசோக்குமார் அவர்களிடம் கூறினேன். அதற்கு அவர் சரி நீங்கள் வி.ஏ.ஓ திரு.வேலுச்சாமியிடமே பணத்தை கொடுத்து விடுங்கள், நான் அவரிடம் இருந்து வாங்கிக் கொள்கிறேன் என்றும் ஆரம்பத்தில் உங்கள் நிலத்தை அளக்க வந்தபோது அவர் உடன் வந்திருந்தார் என்றும் அதனால் அவரிடமே கொடுத்துவிடுங்கள் என்றும் கூறினார். மேலும் பட்டா மாறுதல் உத்திரவு வந்துவிட்டது, ஆனால் உட்பிரிவு செய்த FMB இனிமேல்தான் அப்லோடு செய்யவேண்டும் என்றும், ஆகையால் கேட்ட பணத்தை கொடுத்து விடுங்கள் என்றும் கூறினார். பிறகு நான் அங்கிருந்து வந்துவிட்டேன். என்னிடம் தற்பொழுது ரூ.5,000/– பணம் ரெடியாக உள்ளது. சர்வேயர் திரு.அசோக்குமார் அவர்களுக்கு லஞ்சமாக ரூ.5,000/– த்தை அணியார் கிராம நிர்வாக அலுவலர் திரு.வேலுச்சாமி அவர்கள் மூலமாக கொடுத்து எனது மனைவி பெயரில் பட்டா மாறுதல் மற்றும் உட்பிரிவு தொடர்பான பணியை செய்ய எனக்கு விருப்பம் இல்லை. எனவே அவர்கள்மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd xxxx (P.Thirumurugan) 4.2.2025.

Sir, Received the above typed complaint on 04.02.2025 at 07.00 hrs, the genuineness of the informant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused were also verified through sources and found to be not good. Hence, I registered a case in Namakkal Vigilance and Anti Corruption Cr. No. 02/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 04.02.2025 at 08.15 hrs and took up investigation. Sd xxxx (M.Subashini) DSP VAC Nkl 04/02/25.

Original FIR along with original computer typed complaint of Tr.P.Thirumurugan, S/o Palanisamy are submitted to the Chief Judicial Magistrate cum Special Judge, Namakkal and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

04/02/25

(M.Subashini)
Deputy Superintendent of Police,
V&AC, Namakkal.